மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தாங்கள் அப்படிக் குறிப்பிட்டதாக தவறான தகவல் அமைச்சர் அவர்களுக்குக் கிடைத்த காரணத்தினால்தான் உள்ளபடியே அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டியதாக இருந்தது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் இப்போது இங்கே கொடுத்த விளக்கத்தை முன்பே என்னிடத்திலும் தந்திருக்கிறார்கள். அதை நான் அப்போதே ஒத்துக்கொண்டிருக்கிறேன்.

***266 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நில அடமான (நிலவள) வங்கியில் கடன் கோரும் போது வில்லங்க சர்டிபிகேட் எடுக்க சர்க்கார் கடைப்பிடிக்கும் முறை யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கூட்டுறவு வளர்ச்சி (E.O.C.) அதிகாரியால் பெறப்படும் கடன் மனுக்களைப் பொறுத்தவரையில் 13 ஆண்டுக் காலத்திற்கு வில்லங்கச் சான்றை அனுப்புமாறு துணைப் பதிவாளர்களுக்குத் தெரிவிப்பார். நில அடமான வங்கிகளால் பெறப்படும் கடன் விண்ணப்பங்களைப் பற்றிய வில்லங்கச் சான்றிதழை அனுப்புமாறு வங்கியின் செயலாளர் துணைப்பதிவாளர்களுக்குத் தெரிவிப்பார். வில்லங்க சான்றிதழ்கள் துணைப் பதிவாளர் கையெழுத்துடன் வழங்கப் படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: நில அடமான வங்கிகள் ஏழை எளியவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காகத்தான் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் 1940-ஆம் ஆண்டில் இருந்து வில்லங்க சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்பதால் அதை வாங்க முடியாது, ஏழை எளியவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே 1960-ஆம் ஆண்டில் இருந்து வில்லங்க சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என்று உத்தரவிடுவார்களா? அல்லது வேறு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு அங்கத்தினர் முன்னால் நடந்தவைகளைச் சொல்கிறார். அப்போதெல்லாம் நில அடைமான வங்கிகளின் மூலம் பணக்காரர்களுக்கு மட்டும் தான் கடன் கொடுக்கப்பட்டு வந்தது, 1967-க்குப் பின்னால் . . .

Thiru K. RAMAMURTHI: Sir, is the Hon. the Minister prepared to take responsibility for his statement?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் ஒன்றும் தவறு இல்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் சொல்வது கேள்வி கேட்ட உறுப்பினர் அவர்களுக்குக் கொஞ்சம் ஆறுதலளிக்கும் என்று நினைக்கிறேன். முன்னாலே இருந்த விதிகள் எல்லாம் மாற்றப்

1970 மார்ச் 7]

பட்டு, தளர்த்தப்பட்டு இருக்கின்றன. சான்றிதழ் கொடுப்பதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சிவசுப்பிரமணியன் அவர்கள், ஏழை எளியவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லையே, அவர்களுக்கும் கிடைக்கச்செய்யக் கூடாதா என்று கேட்டார்கள். ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காமல் இருந்த நிலைமையை மாற்றி, சட்டத்தைத் திருத்தித் துணை விதியைத் திருத்தி, ஏழை எளியவர்களுக்கு முதலிடம் கொடுக்கும் வகையில் செய்யப்படக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் யாராவது 10 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால், அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆகவே 25 ஆயிரம் ரூபாய் அளவுக்கு நிலம் சொந்தமாக வைத்திருக்கிறவர்களுக்குத்தான் 10 ஆயிரம் 8 ஆயிரம் என்று கடன் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது புது விதியைப் போட்டு நிலத்தை வளப்படுத்தியதற்குப் பின்னாலே, பயனுள்ளதாக ஆக்கியதற்குப் பின்னாலே, நஞ்சையாக இருந்தால் என்ன மதிப்புப் பெறுமோ, அல்லது புஞ்சையாக இருந்தால் என்ன மதிப்புப் பெறுமோ, அதைப் பார்த்து ஏழை எளிய விவசாயிகளுக்குக்கூட 10 ஆயிரம் 12 ஆயிரம் ரூபாய் என்ற முறையிலே கடன் அளிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது முன்னால் இருந்த நிலைமையே தவிர இப்பொழுதுள்ள நிலைமையல்ல.

Electricity connection to pumpsets in Megnanapuram

* 267 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricty be pleased to state whether electricity connection has been granted to the agricultural pumpsets for which applications from the agriculturists of Megnanapuram village in Tirunelveli district have been pending?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மெஞ்ஞானபுரம் கிராம மக்களிடமிருந்து வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கவேண்டி 30 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில், 7 விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கப்பட்டுள்ளது மற்ற 5 விசையேற்றங்களைப் பொறுத்தவரை, பணிகள் நடந்தேறி வருகின்றன. நான்கு விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் மின்சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதைப் பொறுத்து, மின்சக்தி கொடுக்கப்படும். எஞ்சிய 14 விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் அவற்றிற்கு மின்சக்தி வழங்குவது ஆதாயமற்றதாகும் என்பதால் அவற்றிற்கு மின்சக்தி கொடுப்பதற்குத் தற்சமயம் இயலாது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார். இந்த மெஞ்ஞானபுரம் பகுதியில் டிரான்ஸ்பார்மர்களை மாற்றித்தான் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. உடனடியாக டிரான்ஸ்பார்